## தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2017

ஆண்டு: 7 திகதி: 25.11.2017

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சாந்தி வியநாதன்

மாணவர் பெயர்: ----------------------------------------------------

| வினாக்கள் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 25 | |

1. பின்வரும் உரைப்பந்தியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக. (20 புள்ளிகள்)

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று."

என்பது வள்ளுவர் கூறிய வாய் மொழியாகும். முனிதராகப்பிறந்த நாம் பிறர் நமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்துவிடலாகாது. எமது தேவைகளை நிறைவேற்ற நாம் பலரதும் உதவியை பெறவேண்டியிருக்கும். ஆனால் யாராவது எமக்குத் தீமை செய்திருந்தால் அதனை நாம் உடனே மறந்து விடவேண்டும்.

எமக்குச் செய்த உதவி பெரிதாக இருக்கலாம், சிறிதாகவும் இருக்கலாம். ஆனால் அவ்வுதவி தக்க தருணத்தில் செய்யப்பட்டதாக இருப்பின் அதனை இவ் உலகை விடப் பெரிதாக மதிக்க வேண்டுமென வலியுறுத்துகிறார் வள்ளுவர் பெருந்தகை.

நன்றியை என்றும் போற்றும் சான்றோர் அதனைப் பெரிதாகவே மதித்து வாழ்வர். அந்நன்றிக்கடனுக்காக தம்மையே அர்ப்பணம் செய்யவும் துணிவர்.

துினைக்கும் பனைக்கும் எத்தனை வித்தியாசம். சேய்த உதவி தினையாக இருந்தாலும் அவ்வுதவியை பனையாக மனதிலே கொண்ட மாந்தர் எம்மத்தியில் வாழத்தான் செய்கிறார்கள்.

நுன்றி மறந்தவரை உலகம் "நன்றி கெட்டவா்" எனக்கூறிவிடும் எனப் பயந்து வாழ்ந்தவர் சிலர் உளர். அவர்கள் நன்றி மறந்தவர்களாகத் தாம் ஆகிவிடக்கூடாது என்பதற்காக அநீதியின் சாய்ந்தவர்களானார்கள். கர்ணன் அத்தகையவருள் ஒருவன். பாண்டவர் தனது தம்பியர் என அறிந்த பின்னரும் துரியோதனன் செய்த உதவிக்காக செய்நன்றி மறவாத வீரனானான்.

பூரதத்தில் வரும் இப்பாத்திரம் போலவே இராமாயணத்தில் கும்பகர்ணன் வருகிறான். தனது தமையன் செய்வது அதர்மமான வழி என அவன் அறிந்திருந்தான். எனினும் செய்நன்றி மறவாது வாழ்வதே சிறந்த பண்பு என எண்ணி அண்ணனுக்காகப் போர்க்களம் செல்கிறான் ஆவியும் துறக்கிநான்.

ஏகலைவனையும் நாம் மறந்து விடக்கூடாது அவன் தனது குருவாக எண்ணியிருந்தவரே தன் கட்டைப் பெருவிரலை குரு தட்சனையாகக் கேட்க சிறிதளவும் மனஞ்சோராமல் வெட்டிக் கொடுக்கிறான். அவனது மானசீக குருவாக மட்டுமே துரோணர் விழங்கினார் என்றாலும் நன்றியை அவன் மறக்கத் துணியவில்லை. ஏன் தெரியுமா? வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவன் அவன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
சேய்ந்நன்றி கொன்ற மகற்கு"

i. எதனை மறக்க வேண்டும் என்றும் எதனை மறக்கக் கூடாது என்றும் வள்ளுவர் கூறுகிறார்?

..............................................................................................

ii. நுன்றிக்காகத் தம்மை அர்பணம் செய்தவர்கள் யார்?

..............................................................................................

iii. இவ்வுலகை விடப் பெரிதாக எதனை மதிக்க வேண்டுமென வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்?

..............................................................................................

iv. நன்றி மறந்தவரை உலகம் எவ்வாறு கூறும்?

.......................................................................................................

v. ஏகலைவனின் மானசீகக் குரு யார்?

.......................................................................................................

vi. நன்றி மறவாமல் அநீதியின் பக்கம் சாய்ந்தவர்கள் யார்?

.......................................................................................................

vii. மேலே தரப்பட்ட உரைப்பகுதியில் கூறப்பட்டுள்ள குறள்களை எழுதுக?

.......................................................................................................

2. பின்வரும் சொற்களை வைத்து நான்கு சொற்களுக்கு குறையாமல் வசனம் எழுதுக.

(20 புள்ளிகள்)

i. காலநிலை

.......................................................................................................

ii. இலட்சியம்

.......................................................................................................

iii. சாதனையாளர்

.......................................................................................................

iv. பூர்வீகம்

.......................................................................................................

v. மணமக்கள்

.......................................................................................................

vi. ஊடகங்கள்

.......................................................................................................

vii. பாரம்பரிய உணவு

.......................................................................................................

viii. உயிர்கள்

……………………………………………………………………………………………..

ix. குட்டிக்கதை

……………………………………………………………………………………………..

x. விடுமுறை

……………………………………………………………………………………………..

3. பின்வரும் கதையினைத் தொடர்ந்து எழுதுக.

(15 புள்ளிகள்)

ஒரு காட்டிலே ஆட்டுக்குட்டியைப் பாதுகாப்பாக இருக்க விட்டு தாய் ஆடு உணவு தேடப் புறப்பட்டது. சிறிது நேரத்தில் ஓநாய் ஒன்று வந்து ஆட்டுக்புட்டியுடன் உரையாடியது ……….

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

4. உமது பிறந்த நாளுக்கு வரும்படி உமது நண்பருக்கு 75 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி கட்டுரை எழுதுக.

1. நீங்கள் சென்று வந்த சுற்றுலா பற்றி 100 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.
2. நீங்கள் பார்த்து ரசித்த திரைப்படத்தின் மூலம் நீங்கள் பெற்ற பயன்மிக்க விடயங்களை ஆராய்ந்து 100 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

(25 புள்ளிகள்)